பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

25 12 2024 **WEDNESDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்த தினத்தையொட்டி, மத்தியப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைக்கிறார்.
2. ஆட்சி நிர்வாகத்தை எளிமைப்படுத்த ஏதுவாக, பயன்பாட்டில் இல்லாத சட்டங்கள் திரும்பப்பெறப்பட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
3. இயேசு பிரான் அவதரித்த கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
4. மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் முன்மாதிரியாக திகழ்கிறது என்று அமைச்சர் திரு தா மோ அன்பரசன் கூறியுள்ளார்.
5. வெஸ்ட் இன்டீஸுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 115 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>>

முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்த தினத்தையொட்டி, மத்தியப்பிரதேச மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைக்கிறார்.

கஜுராகோ என்ற இடத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், நாட்டின் முதலாவது நதிகள் இணைப்பு திட்டமான **Ken – Betwa** இணைப்பு தேசிய திட்டத்துக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

இதன்மூலம் மத்தியப்பிரதேசம் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலத்தில் லட்சக்கணக்கான விவசாய குடும்பங்கள் பயன்பெறுவதுடன், பல்வேறு மாவட்டங்களில் விவசாய பணிகளும் அதிகரிக்கும்.

இதுதவிர, அந்த பகுதியில் குடிநீர் தேவைகளும் நிறைவேற்றப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நிகழ்ச்சியில், வாஜ்பாயின் நூற்றாண்டு பிறந்த தினத்தை குறிக்கும் வகையில், நினைவு தபால் தலை மற்றும் நாணயத்தை திரு நரேந்திர மோடி வெளியிடுகிறார்.

கிராமப்புறங்களில் நல்லாட்சியை வழங்கும் வகையில், ஆயிரத்து 153 பஞ்சாயத்து புதிய கட்டிடங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

<<<<<<>>>>>>

ஆட்சி நிர்வாகத்தை எளிமைப்படுத்த ஏதுவாக, பயன்பாட்டில் இல்லாத சட்டங்கள் திரும்பப்பெறப்பட்டிருப்பதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நல்லாட்சி தினத்தையொட்டி, நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்களை அவர் பட்டியலிட்டார்.

வெளிப்படைத்தன்மை, புதுமை கண்டுபிடிப்புகள் மக்களை மையப்படுத்தும் வகையிலான கொள்கைகள் ஆகியவற்றுக்கு அரசு உறுதிபூண்டிருப்பதாக அவர் கூறினார்.

இதன்மூலம், நாட்டில் ஆட்சி நிர்வாகம் மறு சீரமைக்கப்பட்டிருப்பதாக டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் வளர்ச்சிக்கான முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தவுள்ள 112 மாவட்டங்களில் ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், ஜல் ஜீவன் திட்டம், வேளாண்மை, கூட்டுறவு, மருத்துவம், கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுவரும் பணிகளை ஆய்வு செய்ததாக கூறினார்.

புகழ்பெற்ற சுற்றுலா தலமாக திகழும் ராமேஸ்வரத்தில் கூடுதல் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், இம்மாவட்டத்தில் ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் 2 ஆயிரத்து 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, குடிநீர் பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும் என்றும் அவர் கூறினார்.

பாம்பன் ரயில்வே பாலத்தை, ரயில்வே அமைச்சர் விரைவில் பார்வையிட உள்ளதாகவும், அடுத்த மாதம் பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த பாலத்தை திறந்துவைப்பார் என்றும் திரு பூபதி ராஜு சீனிவாச வர்மா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இயேசு பிரான் அவதரித்த கிறிஸ்துமஸ் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களையொட்டி, சென்னை உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் உள்ள தேவாலயங்கள் அலங்கரிக்கப்பட்டு வண்ண விளக்குகளால் ஜொலிக்கின்றன.

நள்ளிரவில் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனைகளில் ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்துகொண்டனர்.

வாட்டிகன் நகரில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் புத்தாண்டை வரவேற்கும் விதமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பு பிரார்த்தனை நடத்தினார்.

தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

சென்னை சாந்தோம் தேவாலயம், பெசன்ட் நகர் வேளாணாங்கண்ணி மாதா ஆலயம், எழும்பூர், பாரிமுனை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் உள்ள தேவாலயங்களில் சிறப்பு திருப்பலிகள் நடைபெற்றன.

தூத்துக்குடியில் உள்ள புகழ்பெற்ற பனிமயமாதா பேராலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு பிரார்த்தனையில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

பாளையங்கோட்டை தூய சவேரியார் பேராலயம், கத்தீட்ரல் பேராலயம் உள்ளிட்ட நெல்லை மாவட்டத்தின் அனைத்து தேவாலயங்களிலும், தென்காசி தூய மைக்கேல் தேவாலயம் உள்ளிட்ட தேவாலயங்களிலும் நள்ளிரவு பிரார்த்தனைகள் விமரிசையாக நடைபெற்றன.

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி மாதா பேரலயத்தில் நடைபெற்ற சிறப்பு திருப்பலியில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - செல்வன் ஜெபராஜ் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழகம் முன்மாதிரியாக திகழ்கிறது என்று மாநில சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில்

33 லட்சத்து 41 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

நாடு முழுவதும் 2 கோடியே 68 லட்சம் மாற்றுத்திறனாளிகள் உள்ளதாகவும், தமிழகத்தில் மட்டும் 9 லட்சத்து 60 லட்சம் பேர் உள்ளதாகவும் அவர் கூறினார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்குதல், அவர்களுக்கு மாதம் இரண்டாயிரம் ரூபாய் உதவித்தொகை, இலவச பேருந்து பயண அட்டை உள்ளிட்ட நலத்திட்டங்களை வழங்குவதில் தமிழக அரசு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக திரு தா மோ அன்பரசன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

டங்ஸ்டன் சுரங்கம் அமையவுள்ள இடத்தை மறு ஆய்வு செய்ய மத்திய அரசு உத்தரவிட்டிருப்பதற்கு பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

மதுரை மாவட்டம் மேலூர் அருகே டங்ஸ்டன் சுரங்கத்திற்கான அனுமதி ஆணையை தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறும், பல்லுயிர் பெருக்கம்

தொடர்பாக புவியியல் ஆய்வுக்குழு சோதனை மேற்கொள்ளும் என்றும் மத்திய அரசு நேற்று அறிவித்தது.

இதற்கு நன்றி தெரிவித்து திரு அண்ணாமலை வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டிக்கு, தமிழக பிஜேபி சார்பிலும், மதுரை மாவட்ட மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

ஆப்கானிஸ்தானின் ஜலாலபாத்தில் உள்ள இந்திய துணைத்தூதரக அலுவலகத்தில் ஆயுதம் தாங்கிய நபர்கள் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். 3 பேர் காயமடைந்தனர்.

------------------

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரின் அமெரிக்க பயணத்தையொட்டி, அந்நாட்டு அதிகாரிகளை வெளியுறவுத்துறை செயலாளர் திரு விக்ரம் மிஸ்ரி நேற்று சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

-------------

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், இரண்டு நாள் பயணமாக இன்று தெலங்கானா செல்கிறார்.

--------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கேலோ இந்தியா பயிற்சி மைய கபடி பயிற்றுனர் தேர்வு செய்யப்பட உள்ளதால், சர்வதேச மற்றும் தேசிய அளவில் பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள் வரும் 4-ஆம் தேதிக்குள் தங்களின் சுய விவரங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

--------------------

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 26 பேர் கொண்ட இரண்டாவது வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.

-------------

கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

-----------------

நீலகிரி மாவட்டம் உதகையில் சர்வதேச குறும்பட விழா நாளை மறுநாள் தொடங்கி, மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

-----------------

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுகோட்டை தலைமை அஞ்சலகம் சார்பில் அதிராம்பட்டினத்தில் நடைபெற்ற ஆதார் சிறப்பு முகாமில் ஏராளமானோர் பங்கேற்று பயனடைந்தனர்.

-------------

பண்டிகை காலத்தை முன்னிட்டு, பல்வேறு ஐஸ்கீரிம் வகைகளை வரும் 31-ஆம் தேதிவரை சிறப்பு தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்படும் என்று ஆவின் நிறுவனம் அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

வெஸ்ட் இன்டீஸுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 115 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 5 விக்கெட் இழப்பிற்கு 358 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய வெஸ்ட் இன்டீஸ் அணி, 46 புள்ளி இரண்டு ஓவரில், 243 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா வென்றுள்ளது.

மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை மறுநாள் வதோதராவில் நடைபெறுகிறது.

--------------

ஆசிய இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Parv Chaudhary** இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளார்.

தோஹாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், 96 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

இதன்மூலம் இந்தியா 3 தங்கம், 4 வெள்ளி, ஐந்து வெண்கலம் என மொத்தம் 12 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முன்னேறியுள்ளது.

***<<<<<<END>>>>>>***